தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

**அதிக விலைக்கு உரங்கள் விற்றால் உரிமம் ரத்து**

**திருநெல்வேலி**, மாவட்டத்தில் உள்ள உரங்கள் விற்பனை செய்யும் நிறுவனங்கள் கூடுதல் விலைக்கு உரங்களை விற்றால் அவர்களது உரிமம் ரத்து செய்யப்படும் என வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) கஜேந்திரபாண்டியன் எச்சரித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அனைத்து உர விற்பனை நிலையங்களிலும் உரங்களை சரியான விலைக்கு விற்பனை செய்ய வேண்டும். ஒவ்வொரு உர மூட்டைகளிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் அதிகபட்ச சில்லறை விலையே சரியான விலையாகும். இந்த அதிகபட்ச விலைக்கு மிகாமல் விற்பனை செய்ய வேண்டும். கூடுதலாக விலை வைத்து விற்பனை செய்தால் உர விற்பனையாளர்கள் மீது நடவடிக்கை எடுப்பதுடன், அவர்களது உரிமமும் ரத்து செய்யப்படும். விற்பனை செய்யப்படும் உரங்களுக்கு ரசீது வழங்க வேண்டும். ரசீதில் விவசாயியின் பெயர், முகவரி, உரங்களின் அளவு, விற்பனை விலை குறிப்பிட வேண்டும். விவசாயி கையொப்பம், விற்பனையாளர் கையொப்பம் அவசியமானது.

அனைத்து தனியார் விற்பனை நிலையங்களிலும் உரங்களின் விலைப்பட்டியல், இருப்பு விவரம் அடங்கிய தகவல் பலகை இடம்பெறச் செய்ய வேண்டும். நாள்தோறும் விலை விவரம் குறிப்பிட வேண்டும்.

மேலும், தரமான, கலப்படம் இல்லாத உரங்களையே விற்பனை செய்ய வேண்டும். இவற்றை கண்காணிக்க ஒவ்வொரு வட்டாரத்திலும் சிறப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவினர் தொடர்ந்து ஆய்வு செய்வர். போலியான

அல்லது கலப்பட உரம் விற்பனை செய்தால் சட்டப்பூர்வமாக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர்.

**<u>விவசாயிகளுக்கு மேம்பாட்டுப் பயிற்சி</u>**

**காரைக்குடியில்,** வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் மூலம் நீர்வள நிலவளத்திட்டத்தில் விவசாயிகளுக்கான உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பயிற்சி பூமாலை வணிக வளாகத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சி துவக்க விழாவில், வேளாண் வணிகத் துறை வேளாண்மை அலுவலர் கோ. குப்புசாமி தலைமை வகித்துப் பேசினார். பயிற்சியின்போது விற்பனைத் துறையின் கீழ் கட்டப்பட்டுள்ள உலர்களங்கள், சேமிப்பு கிடங்குகள் பராமரிப்பு பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது.

குன்றக்குடி வேளாண் அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர் தேன்மொழி காய்கறி மற்றும் பழங்கள் சிறுதானியங்களில் மதிப்பு கூட்டுதல் மூலம் கூடுதல் வருவாய் கிடைக்கும் என ஆலோசனை வழங்கிப் பேசினார். வேளாண்மை துறை உதவி இயக்குநர் ஆர். மணிவண்ணன், வேளாண்மை பொறியியல் துறை உதவிப்பொறியாளர் பி. இந்திரா, தோட்டக் கலைத்துறை உதவி இயக்குநர் எம். சாந்தி, பாண்டியன் கிராம வங்கி மேலாளர் எஸ். ஹரிகரன் உள்ளிட்டோர் பல்வேறு அரசு திட்டங்கள் குறித்து விளக்கிப் பேசினர்.

மேலும் விவசாயிகள் குழுவாக இணைந்து உற்பத்தி செய்யும்போது விளைபொருளுக்கு சந்தையில் நல்ல விலை கிடைக்கும் என ஆலோசனை வழங்கப்பட்டது. இப்பயிற்சிக் கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் ஏ. ஆரோக்கிய அந்தோணி, கணேசன், கனகராஜன் ஆகியோர் செய்திருந்தனர்.

**<u>விவசாயிகள் மழை நீரை சேமிக்க வேளாண் துறை வேண்டுகோள்</u>**

விவசாயிகள் மழை நீரைச் சேமித்து, நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்திப் பயன்படுத்த வேண்டுமென வேளாண் துறை வேண்டுகோள் விடுத்துள்ளது.

பருவமழை மாறுபாடு காரணமாக தற்போது விவசாயத்துக்குத் தேவையான தண்ணீர் கிடைப்பதில் கடும் சிரம் ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாய பரப்பளவு குறைந்து, உணவுப் பொருள்களின் உற்பத்தியும் பாதிக்கப்படுகிறது. இந்நிலையில், மழை நீரைச் சேமித்து கிணறுகள், ஆழ்துளைக் கிணறுகளின் நீர்மட்டத்தை கணிசமாக உயர்த்திப் பயன்படுத்த வேண்டியது அவசியமாகிறது.

மழை நீரைச் சேமிக்க மழைக்கு முந்தைய காலகட்டத்தில் விவசாய பூமியில் தண்ணீர் தேங்கி நிற்கும் வகையில் நீள வாக்கில் வரப்புடன் கூடிய பாத்திகள் அமைக்க வேண்டும். தவிர கிணறு, ஆழ்துளைக் கிணறுகளுக்கு நெருக்கமாக வசதிக்குத் தகுந்த நீள, அகலத்தில் சுமார் ஆறடி ஆழத்துக்கு குழி தோண்டி, அடியில் ஒன்றரை அடி உயரத்துக்கு சிறு கற்களைப் போட்டு, அக்குழியிலிருந்து தண்ணீர் கிணறுகளுக்குள் செல்லுமாறு குழாய் அமைக்க வேண்டும்.

இம்முறையின் மூலமாக நிலத்தடி நீர் மட்டம் உயர்வதுடன், அதிகமாகத் தேங்கி வழிந்து செல்லும் மழைநீரும் கிணற்றில் சேமிக்கப்படுகிறது. இம்முறையில் அறவே வறண்டு போன ஆழ்துளைக் கிணறுகளில்கூட தண்ணீர் கிடைக்க வாய்ப்புள்ளது.

மேலும், சாகுபடி செய்யப்படும் பயிர்கள், மரவகைகளுக்குத் தகுந்தவாறு சிக்கனமான சொட்டு நீர், தெளிப்பு நீர்ப் பாசன முறைகளைப் பயன்படுத்தலாம் என வேளாண் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>விவசாயிகளுக்கு மணிலா விதைகள் வழங்கல்</u>

**செங்கம்,** வேளாண்மை அலுவலகத்தில் நடைபெற்ற விழாவில், 50 சதவீதம் மானியத்தில் மணிலா விதைகள் வழங்கப்பட்டன.

விழாவுக்கு ஒன்றியக் குழுத் தலைவர் எம்.கணேசன் தலைமை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குநர் சிவக்குமார் முன்னிலை வகித்தார். துணை வேளாண்மை அலுவலர் ஜெயசீலன் வரவேற்றார்.

விதைகளை மாவட்ட வணிக வரித் துறை ஆலோசனை குழு உறுப்பினர் ஆர்.மதியழகன் வழங்கினார்.

கூட்டுறவு சங்கத் தலைவர்கள் (பாய்ச்சல்) கிருஷ்ணமூர்த்தி, (பரமனந்தல்) சங்கர், (சி.சொர்ப்பனந்தல்) முருகன், ஊராட்சி மன்றத் தலைவர்கள் குப்பன், பொன்னையன், செல்வசேகர், ருக்மணிராஜி, உதவி வேளாண்மை அலுவலர்கள் சரவணன், சங்கர், கலைமணி, ராஜமஜெயம், குமார், விதை உதவி அலுவலர் சங்கர், தண்டபாணி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இதைத் தொடர்ந்து, வேளாண்மைத் துறை அலுவலர்கள் கூறியதாவது:

சோலார் பம்புசெட் தேவைபடும் விவசாயிகள் புகைப்படத்துன், சிட்டா நகல் சேர்த்து அலுவலகத்தில் மனு கொடுக்க வேண்டும் செங்கம் வட்டத்தில் 80 சதவீதத்தில் 16 விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

மேலும் திறந்தவெளி கிணறு 8, போர்வெல் 8 விவசாயிகளுக்கும் வழங்கப்படும்.

மணிலா, உளுந்து, நெல் விதைகள் மற்றும் ஜிப்சம், உயிர் உரங்கள் இருப்பில் உள்ளன. தேவைப்படும் விவசாயிகள் அந்ததந்த பகுதி உதவி வேளாண்மை அலுவலர்கள் பரிந்துரை சீட்டுபெற்று கொள்ளலாம் என்றனர்.

"குறுவை சிறப்புத் திட்டத்தில் பயன்பெறுவோர் புதியவர்களாக இருக்க வேண்டும்' குறுவை சாகுபடி சிறப்புத் திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகள் புதியவர்களாக இருக்கும் வகையில் தேர்வு செய்யப்பட வேண்டும் என்றார் வேளாண்மைத் துறை முதன்மைச் செயலர் சந்தீப் சக்சேனா.

திருவாரூர் ஆட்சியர் அலுவலகத்தில் புதன்கிழமை, திருவாரூர் ஆட்சியர் எம். மதிவாணன் தலைமையில் நடைபெற்ற, திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர் மாவட்டத்தில் குறுவை சாகுபடி பணிகள் மேற்கொள்வது குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் அவர் மேலும் பேசியது:

தமிழகத்தில் குறுவை சாகுபடி மேற்கொள்ள 12 மணி நேரம் மும்முனை மின்சாரம், 100% மானியத்தில் பிவிசி குழாய்கள் உள்ளிட்ட பல்வேறு சிறப்புத் திட்டங்களை தமிழக அரசு அறிவித்துள்ளது.

திருவாரூர் மாவட்டத்தில் 36,000 ஹெக்டேர், நாகையில் 35,000 ஹெக்டேர், கடலூரில் 35,000 ஹெக்டேரில் குறுவை நெல் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. 100% மானியத்தில் பிவிசி குழாய், சமுதாய நாற்றாங்கால், களையெடுக்கும் கருவி உள்ளிட்டவை வழங்க திருவாரூருக்கு ரூ. 9.68 கோடி, நாகைக்கு ரூ. 8.84 கோடி, கடலூருக்கு ரூ. 2.73 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

திருவாரூர் மாவட்டத்தில் இதுவரை 2,201 ஹெக்டேரிலும், நாகையில் 10,809 ஹெக்டேரிலும், கடலூரில் 2,887 ஹெக்டேரிலும் குறுவை பணிகள் நடைபெற்றுள்ளன. மேலும் திருவாரூர் மாவட்டத்தில் 7,610 ஹெக்டேரிலும், நாகையில் 18,210 ஹெக்டேரிலும், கடலூரில் 6,840 ஹெக்டேரிலும் நாற்று தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

வேளாண் அலுவலர்கள் குறுவை சிறப்புத் திட்டத்தில் பயன்பெறும் விவசாயிகள் புதியவர்களாக இருக்கும் வகையில் தேர்வு செய்ய வேண்டும். கடந்த ஆண்டு சிறப்புத் திட்டத்தில் பயன்பெற்றவர்களை மீண்டும் தேர்வு செய்யக் கூடாது என்றார் சந்தீப் சக்சேனா.

கூட்டத்தில் வேளாண் இயக்குநர் மு. ராசேந்திரன், திருவாரூர் மாவட்ட வருவாய் அலுவலர் பு. மணிமாறன், வேளாண்மை பொறியியல் துறை முதன்மை பொறியாளர் செந்தில் மற்றும் திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர் மாவட்ட வேளாண் அலுவலர்கள், விவசாயிகள் பங்கேற்றனர்.

**<u>வெள்ளக்கோவில் பகுதியில் சின்ன வெங்காயம் விலை உயர்வு</u>**

**வெள்ளக்கோவில்**, பகுதியில் வரத்து குறைவு காரணமாக,சின்ன வெங்காயத்தின் விலை தொடர்ந்து ஏறுமுகமாகவே உள்ளது.

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் கிலோவுக்கு 10 ரூபாய் விலை உயர்ந்துள்ளது. தற்போது கிலோ 30 ரூபாய்க்கு கடைகளில் விற்கப்படுகிறது. போதுமான மழையில்லாததால் வெங்காய சாகுபடியின் பரப்பளவு கணிசமாகக் குறைந்துள்ளது. மேலும் விலை உயரக்கூடும் என்கிற யூகத்தின் அடிப்படையில்

பலர் வெங்காயத்தை விற்காமல் இருப்பு வைத்துள்ளனர். ஆந்திர மாநிலத்திலிருந்தும் வரத்து குறைந்து போனது.

தினசரி மார்க்கெட், வாரச்சந்தை, மளிகை, காய்கறிக் கடைகளில் தற்போது இரண்டாம் தர வெங்காயமே கிடைக்கிறது. விடுமுறைக்குப் பின்பு பள்ளி, கல்லூரிகள் மீண்டும் திறந்துள்ளதால் விடுதிகளுக்கு வெங்காயத்தின் தேவை ஒரு சேர அதிகரித்துள்ளது.

வரத்துக் குறைவு காரணமாக விலை அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். பெரிய வெங்காயத்தின் விலை சற்றுக் குறைவாக இருந்தாலும், இதன் பயன்பாடும் குறைவாகவே உள்ளது.

ஜூன் முதல் மூன்று மாத காலம் வெங்காய உற்பத்திப் பருவமாக இருப்பதால், அதன் பிறகே விலை குறையுமெனத் தெரிகிறது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பெரியாறு அணை நீர்பிடிப்பில் மழை**

**கூடலூர்**: பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில், கடந்த சில தினங்களாக, அவ்வப்போது மழை பெய்வதும், பின் வறண்டு போவதுமாக உள்ளது. இந்நிலையில், நேற்று நீர்பிடிப்பு பகுதியான பெரியாறில் 43.4 மி.மீ., யும், தேக்கடியில் 8.4 மி.மீ.,யும் மழை பதிவானது. அணைக்கு நீர் வரத்து 118 கன அடியாக இருந்தது. தமிழகப்பகுதிக்கு 300 கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது. நீர்மட்டம் 112.60 அடி. நீர் இருப்பு 1328 மில்லியன் கன அடி.

அணை நீர்பிடிப்பில் அவ்வப்போது மழை பெய்து வருவதால், அணைக்கு நீர்வரத்து அதிகரிக்கவில்லை

## பயிர் கடன் இலக்கு ரூ. 282 கோடி: கூட்டுறவு துறை அமைச்சர் தகவல்

"கூட்டுறவு துறை மூலம், ஈரோடு மாவட்டத்தில், 282.10 கோடி ரூபாய் பயிர் கடனாக வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது," என, கூட்டுறவு துறை அமைச்சர் செல்லூர் ராஜூ தெரிவித்தார்.

ஈரோடு மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடு மற்றும் பொது வினியோக திட்டம் குறித்த கூட்டம், கலெக்டர் சண்முகம் தலைமையில் நடந்தது. எம்.எல்.ஏ., கிட்டுசாமி, ஆவின் தலைவர் ராமசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டுறவு துறை அமைச்சர் செல்லூர் ராஜூ கூறியதாவது: இம்மாவட்டத்தில் உள்ள, 162 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் ஒரு மலைவாழ் மக்கள் பல்நோக்கு கூட்டுறவு சங்கம் மூலம், விவசாயிகளுக்கு தேவைப்படும் கடன் உதவி வழங்கவும், தேவையான உரம் தட்டுப்பாடின்றி வழங்கப்படுகிறது. கடந்தாண்டு, 265.97 கோடிக்கு பயிர் கடன் வழங்கப்பட்டது. 43,962 பேர் பயன் பெற்றனர். 2014--15ம் ஆண்டுக்கு, 282.10 கோடி பயிர் கடன் வழங்க, இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்த, 2013--14ம் ஆண்டில், 96 லட்சம் அளவுக்கு, மாற்று திறனாளிகள், பல்வேறு தொழில் துவங்க, கடன் பெற்றுள்ளனர். இந்தாண்டு, 1.15 கோடி ரூபாய் அளவுக்கு, மாற்று திறனாளிகளுக்கு, கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், 36ல், செயல்படும் வேளாண்மை சேவை மையங்களில், மிக குறைந்த வாடகையில், பல்வேறு விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகிறது. சங்க சேவையை விரைவுபடுத்த, இம்மாவட்டத்தில், 162 தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள், ஒரு மலைவாழ் மக்கள் பெரும் பல்நோக்கு கூட்டுறவு சங்கம் ஆகியன, கணினி மயமாக்கப்பட்டுள்ளது.

பெருந்துறை, பவானி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கங்களில், தலா, 19 லட்சம் ரூபாய் செலவில் மின்னணு எடை மேடை

அமைக்கப்பட்டு, குறைந்த கட்டணத்தில், விவசாயிகள், தங்கள் விளை பொருட்களை, எடையிட்டு, பயன் அடைந்து வருகின்றனர்.

கடந்த, மூன்று ஆண்டுகளில், 100 டன் கொள்ளளவு கொண்ட, 125 கிடங்குகள், 1,000 டன் கொள்ளளவு கொண்ட, ஏழு கிடங்கு என, மொத்தம், 132 கிடங்கு கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்தாண்டில், 100 டன் கொள்ளளவு உள்ள, 26 கிடங்கு, 500 டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு, ஐந்து, 1,000 டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு, மூன்று என, மொத்தம், 34 கிடங்குகள் கட்ட, ஆணை வழங்கப்பட்டுள்ளது. இப்பணி விரைவில் துவங்கும். தானிய ஈட்டு கடன், 47.25 லட்சத்துக்கு, வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளது. 20 ரூபாய்க்கு, ஒரு கிலோ அரிசி திட்டத்தில், ஈரோடு சிந்தாமணியின், 14 கிளைகளில் அரிசி விற்கப்படுகிறது. இது வரை, 377 டன் அரிசி விற்பனை செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களின், 830 மகளிர் உறுப்பினர்களுக்கு தலா, 2,500 ரூபாய் வீதம், 20.75 லட்சம் ரூபாய், பங்கு மூலதன மானியம் விடுவிக்கப்பட்டது. கடன் பெறும் தகுதி உயர்த்தப்பட்டு, 412 உறுப்பினர்கள், இரண்டு கோடி அளவுக்கு கடன் பெற்று, பயன் அடைந்துள்ளனர். பங்கு மூலதன மானிய திட்டத்தின் கீழ், மாவட்டத்தில் மொத்தம், 1,416 பேருக்கு, 43.40 லட்சம் பங்கு மூலதன மானியம் விடுவிக்கப்பட்டு, 523 நபர்களுக்கு, 2.27 கோடிக்கு, கடன் வழங்கப்பட்டுள்ளது, என, தெரிவித்தார்.

## கேரளா செல்லும் கறிக்கோழி 90 சதவீதம் குறைந்தது: 'பிளாட் ரேட்' நுழைவு வரியால் சிக்கல்

**திருப்பூர்**: தமிழகத்தில் இருந்து கேரளாவுக்கு கறிக்கோழிகள் விற்பனைக்கு செல்வது 90 சதவீதம் குறைந்துள்ளதால், உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில், 26 ஆயிரம் கோழி பண்ணைகள் உள்ளன; 12 லட்சம் கறிக்கோழிகள் வளர்க்கப்படுகின்றன. இங்கு உற்பத்தியாகும் கறிக்கோழிகளில் பெரும்பங்கு, கேரளாவுக்கு அனுப்பப்படுகிறது. பண்ணை விலையில், இரண்டு சதவீதம் நுழைவு

வரி வசூலித்ததால், சிக்கல் ஏற்படவில்லை. இந்நிலையில், கேரளாவில் கறிக்கோழி வளர்ப்பை அம்மாநில அரசு ஊக்கப்படுத்தி வருவதோடு, கறிக்கோழிகளுக்கு 'பிளாட் ரேட்' நுழைவு வரி நிர்ணயித்தது. அதாவது, தமிழகத்தில் கோழியின் பண்ணை கொள்முதல் விலை எவ்வளவு இருந்தாலும், கேரளத்திற்குள் வரும் போது, 95 ரூபாய் என நிர்ணயித்து, அதிலிருந்து கிலோவுக்கு 14.5 சதவீதம் வரி செலுத்த வேண்டும். தமிழகத்தில் கோழியின் பண்ணை கொள்முதல் விலை, தற்போது அதிகபட்சம் 70 ரூபாய் என இருக்கும் நிலையில், கேரளாவில் 95 ரூபாய் 'பிளாட் ரேட்' நிர்ணயம் செய்யப்பட்டது. 2013 ஆகஸ்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது முதல், படிப்படியாக குறைந்து, தற்போது கேரளாவுக்கு செல்லும் கறிக்கோழியின் அளவு 90 சதவீதம் குறைந்துள்ளது. தினமும் ஒரு லட்சம் கிலோ கேரளாவுக்கு சென்று வந்த நிலையில், தற்போது 10 ஆயிரம் கிலோ மட்டுமே செல்கிறது. இதனால், தமிழகத்தில் கறிக்கோழி தொழில் கடும் நெருக்கடியை சந்தித்து வருகிறது; உற்பத்தி 20 சதவீதம் வரை குறைக்கப்பட்டுள்ளது. கறிக்கோழி ஒருங்கிணைப்பு கமிட்டி (பி.சி.சி.,) செயலாளர் சுவாதி கண்ணன் கூறுகையில், 'கேரள அரசின் 'பிளாட் ரேட்' நடைமுறையால், கேரளாவுக்கு செல்லும் கறிக்கோழி 90 சதவீதம் குறைந்துள்ளது. இதனால் கறிக்கோழி தேக்கம், உற்பத்தி குறைவு போன்ற பாதிப்புகள் ஏற்படுகின்றன. கறிக்கோழி தொழிலை காப்பாற்ற,கேரள அரசுடன் தமிழக அரசு பேச்சு நடத்தி, வரியை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்,' என்றார்.

## கலக்கம்! : பருத்தியில் நோய் தாக்குதல் அதிகரிப்பால்.... : அதிகாரிகளுக்கு விவசாயிகள் கோரிக்கை

**கிருஷ்ணகிரி**: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பருத்தியில், நோய் தாக்குதல் மீண்டும் அதிகரித்து உள்ளதால், விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.

இந்தியாவில் பயிரிடப்படும் பணப்பயிர்களில் முக்கியமானது, பருத்தியாகும். வெள்ளைதங்கம் என்று அழைக்கப்படும் பருத்தி, தமிழ்நாட்டில் மொத்தம், இரண்டு லட்சம் ஏக்கர் பரப்பில், சாகுபடி செய்யப்படுகிறது. இதன் மூலம், ஆண்டுக்கு

சுமார், ஐந்து லட்சத்து, 50,000 பேல்கள் பஞ்சு உற்பத்தி ஆகின்றது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஊத்தங்கரை, மத்தூர், பர்கூர் ஆகிய சுற்றுவட்டார பகுதிகளில் சுமார், 1,500 ஏக்கர் பரப்பளவில், பருத்தி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

பருத்தி சாகுபடி செய்ய ஆகும் மொத்த செலவில், 25 சதவீதம் பூச்சி மருத்துகளுக்கே செலவிடப்படுகிறது. விவசாயிகள் சாகுபடி செய்யும் பயிர்களில் பருத்திக்குத்தான், அதிக அளவில் பூச்சி நோய் மருந்துகளை பயன்படுத்துகின்றனர். மேலும், பருத்தி சாகுபடி செய்வதால் அதிகப்படியான பூச்சிமருந்தை பயன்படுத்த வேண்டும் என்ற ஒரு தவறான எண்ணம் விவசாயிகளிடையே உள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தற்போது சாகுபடி செய்துள்ள பருத்தியில் நோய் தாக்கும் பூச்சிகளின் பரவல் அதிக அளவில் உள்ளது. இதனை அழிக்கும் வழிமுறைகள் குறித்து, வேளாண் துறையினர் கூறியது:

பருத்தியில் நோய் தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்த அதிகப்படியான பூச்சிமருந்தை பயன்படுத்தாமல், விவசாயிகள் ஓரிரு பூச்சி மருத்துகளை மட்டும் பயன்படுத்த வேண்டும். மேலும், விவசாயிகள் நோய் தாக்கும் பூச்சிகளை அழிக்க ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முØறைகளை பின்பற்ற வேண்டும்.

ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையில் முதற்கட்டமான உழவியல் முறையில் கோடை உழவு செய்வதன் மூலம் கூட்டு புழு, வேர்புழு, நோய்களின் வித்துகள் மண்ணின் மேற்புறத்தில் கொண்டு வரப்பட்டு, சூரிய ஒளியால் அழிக்கப்படுகிறது. மேலும், மண் ஆய்வு செய்து பரிந்துரை செய்யப்படும், உரத்தினை இடுவதன் மூலமும், இயற்கை உரங்கள், தரமான விதைகள் ஆகியவற்றை பயன்படுத்துவதன் மூலம் நோய்கள் மற்றும் பூச்சிகளை கட்டுப்படுத்தலாம்.

இரண்டாவது கட்டமாக, கைவினை முறையில், பச்சை காய்புழு, இலை தின்னும், புழுக்களை பொறுக்கி, எடுத்து அழிக்கலாம். இனகவர்ச்சி பொறியை பயன்படுத்தி தாய் அந்து பூச்சிகளை கவர்ந்திழுத்தும், மஞ்சள் வண்ண ஒட்டுப்பொறியை பயன்படுத்தி தத்துப்பூச்சி, வெள்ளை ஈ, அசுவினி, இலைப்பேன் போன்ற பூச்சிகளை அழிக்கலாம்.

மூன்றாவது கட்டமான உயிரியல் முறையில், ட்ரைக்கோ டெர்மாவிரிடி, சூடோமோனஸ் நுண்ணுயிரிகளை கொண்டு விதை நேர்த்தி செய்வதன் மூலம்

வாடல் நோய் மற்றும் வேர் அழுகள் நோயினை கட்டுப்படுத்தலாம். நான்காவது கட்டமான வேதியியல் முறையில், அசுவினி, இலைப்பேன், தத்துப்பூச்சி, போன்ற பூச்சிகளை கட்டுப்படுத்த மிதைல் டெமட்டான் அல்லது காண்பிடார், இவற்றில், ஏதாவது, ஒன்றினை செடிகளில் மேல் நன்கு நனையும்படி, இளம்பருவத்தில் கைத்தெளிப்பான் மூலம் தெளிக்கலாம். வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்த டிரையசோபாஸ் மற்றும் பைரித்திராய்டு மருந்துகளை இளம் பருவத்தில், தொடர்ந்து பயன்படுத்துவதை தவிர்க்கவும்.

அமெரிக்கன் காய் புழுவை கட்டுப்படுத்த குளோரோபைரிபாஸ் அல்லது எண்டோசல்பான் ஆகியவற்றையும், இளம் சிவப்பு காய் புழுவினை கட்டுப்படுத்த வேப்பங்கொட்டை வடிசாறு ஆகியவற்றை பயன்படுத்தலாம்.

எனவே, கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த பருத்தி விவசாயிகள் அனைவரும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கையாண்டு, பருத்தியில் கூடுதல் மகசூல் பெற்று அதிக வருமானம் பெறலாம், என்றார்.

## தீவிரம் ! : 65,000 மா, முந்திரி கன்றுகள் உற்பத்தி பணிகள்...: அரசு தோட்டக்கலை பண்ணையில் ஏற்பாடு

**விருத்தாசலம்**: விருத்தாசலம் அரசு தோட்டக்கலை பண்ணையில் 15 ஆயிரம் மாங்கன்றுகள், 50 ஆயிரம் முந்திரி கன்றுகள் ஒட்டுகட்ட, வேர்ச் செடிகள் உற்பத்தி செய்யும் பணி தீவிரமாக நடக்கிறது.

கடலூர் மாவட்டத்தில், 2011 டிசம்பர் 30ல் வீசிய "தானே' புயலில் இரண்டு கோடிக்கும் அதிகமான முந்திரி, மா, பலா, தென்னை உள்ளிட்ட மகசூல் தரும் மரங்கள் வேருடன் சாய்ந்தன. இதனால் விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதித்தது. அதைத் தொடர்ந்து "தானே' மறுவாழ்வு திட்டத்தின் கீழ் விருத்தாசலம் மண்டல ஆராய்ச்சி நிலையம், வன தோட்டக் கழகம், தோட்டக்கலைத் துறை, நெய்வேலி தோட்ட கலைத்துறை, அங்கீகாரம் பெற்ற தனியார் நர்சரிகள் மூலம் 25 லட்சம் முந்திரி கன்றுகள் உற்பத்தி செய்து, புயலில் பாதித்த விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கப்பட்டன.இந்நிலையில், அடுத்த கட்டமாக விருத்தாசலம் அரசு தோட்ட கலைப் பண்ணையில் தேசிய தோட்ட கலை இயக்கம் சார்பில் நடப்பாண்டு 50

ஆயிரம் முந்திரி கன்றுகள், 15 ஆயிரம் மாங்கன்றுகள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, வேர்ச்செடிகள் உற்பத்தி பணி தீவிரமாக நடக்கிறது.

பண்ணை மேலாளர் சீனிவாசன் கூறியதாவது:

தேசிய தோட்ட கலை இயக்கம் சார்பில் 2014 - 15ம் ஆண்டில் 15 ஆயிரம் மா வேர்ச்செடிகள், 50 ஆயிரம் முந்திரி வேர்ச்செடிகள் உற்பத்தி செய்யப்படுகிறது.

அதில், மா வேர்ச்செடிகள் உற்பத்தி செய்ய கடந்த மூன்று மாதங்களுக்கு முன் பாக்கெட்களில் மாங்கொட்டைகள் புதைத்து நாற்று விடப்பட்டன. அவை முளைத்ததும், வேருடன் பிடுங்கி தலைப் பகுதியை வெட்டிவிட்டு மண் குழாய் தொட்டிகளில் வைத்து, பள்ளம் தோண்டி அதில் அடுக்கி வைத்து பராமரித்தோம்.

தற்போது, தலைப்பகுதியை சாணிப் பாலில் நனைத்து பாலித்தீன் சுற்றி பராமரிக்கப்படுகிறது. அடுத்த மூன்று மாதங்களில் கன்று நன்கு வளர்ந்ததும், அதனை பெங்களூரா, ருமானியா, பங்கனபள்ளி, இமாம்பசஸ் உள்ளிட்ட 10 ரகங்களில் உள்ள தாய் செடிகளுடன் பக்கவாட்டில் ஒட்டு கட்டப்படும். அதே போல் வி.ஆர்.ஐ - 3 முந்திரி கன்றுகளுக்கும் தாய் செடியுடன் ஒட்டு கட்டப்படும். பின்னர் கன்றுகள் வளர்ந்ததும் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## <u>சிறு தானியம் பயிரிடும் விவசாயிகளுக்கு மூவாயிரம் ரூபாய் மானியம்! காஞ்சிபுரம் மாவட்ட வேளாண் துறை அறிவிப்பு</u>

**வாலாஜாபாத்** : நடப்பு நிதியாண்டில், சிறு தானியம் பயிரிடும் விவசாயிகள், ஒரு ஹெக்டருக்கு 3,000 ரூபாய் மானியம் பெறுவதற்கு, அந்தந்த வேளாண் விரிவாக்க மையங்களில் விண்ணப்பிக்கலாம் என, வேளாண் துறை தெரிவித்துள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தில், சராசரியாக மழை அளவு 1,161 மி.மீ., உள்ளது. நடப்பு ஆண்டில் இது வரையில் 42 மி.மீ., மழை பெய்துள்ளது. இது நெற்பயிர் நடவு செய்வதற்கு ஏற்ற வகையில் இல்லை என, விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இருப்பினும், விவசாயம் செய்யும் கட்டாயத்தில் உள்ள விவசாயிகள், நெற்பயிரை விட சிறு தானியம் பயிரிடுவதற்கு, நிலத்தை பக்குவப்படுத்தி வருகின்றனர். அவர்களை ஊக்குவிக்கும் வகையில், விதை; நுண்ணூட்ட கலவை; அடியுரம்;

யூரியா உள்ளிட்ட இடுபொருட்களை வழங்கி, வேளாண் துறை ஊக்குவித்து வருகிறது.

உதாரணமாக, நடப்பு நிதியாண்டிற்கு, சிறு தானியம் இயக்கத்தின்கீழ், ராகி (கேழ்வரகு) பயிரிடும் விவசாயிகளுக்கு, ஒரு ஹெக்டேருக்கு 3,000 ரூபாய் என, 200 ஹெக்டருக்கு, ஆறு லட்சம் ரூபாயும்; மக்காசோளம் பயிரிடும் விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேருக்கு 3,000 வீதம் ஒன்றியத்திற்கு இரண்டு ஹெக்டேர் என, மாவட்டம் முழுவதும் 26 ஹெக்டேருக்கு 78 ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட உள்ளது.

மேலும், விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க, 40 ஆயிரம் ரூபாயும்; விதைகள் மற்றும் வேளாண் இடுபொருட்களுக்கு 60 ஆயிரம் ரூபாயும்; செயல் விளக்கத் தோட்டம் அமைக்க 55 ஆயிரம் ரூபாயும் என, மொத்தம் 8.33 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

இதுகுறித்து, காஞ்சிபுரம் மாவட்ட வேளாண் துறை உயரதிகாரி ஒருவர் கூறுகையில், "சிறு தானியங்களின் இயக்கத்தின் கீழ், ஒரு ஹெக்டேர் பரப்பில் சிறுதானியம் சாகுபடி செய்யும் விவசாயிக்கு, 3,000 ரூபாய் மானியம் வழங்கப்பட உள்ளது. இதை பெற விரும்பும் விவசாயிகள்,அந்தந்த வட்டார வேளாண் விரிவாக்க மையங்களில், நிலத்திற்கு உரிய பட்டா, சிட்டா அடங்கல் உள்ளிட்ட சான்றுகளுடன் உதவி இயக்குனர்களிடம் விண்ணப்பித்து பயன்பெறலாம்," என்றார்.

## பருத்தி வாரச் சந்தையில் ரூ. 30 கோடிக்கு விற்பனை

**கள்ளக்குறிச்சி**: கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்றுடன் இந்த பருவத்திற்கான பருத்தி வார சந்தை முடிவடைந்தது.மாவட்டத்தில் கள்ளக்குறிச்சியில் மட்டுமே நடக்கும் பருத்தி சந்தையில் விழுப்புரம், கடலூர், பெரம்பலூர் மாவட்ட பகுதிகளைச் சேர்ந்த 116 விவசாயிகள் 1,500 பஞ்சு மூட்டைகளை நேற்று விற்பனைக்கு கொண்டு வந்தனர்.தேவியாக்குறிச்சி, தேனி, மகுடஞ்சாவடி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் பஞ்சு மூட்டைகளுக்கு விலை நிர்ணயம்

செய்தனர். நேற்று எல்.ஆர்.ஏ., பஞ்சு ரகம் ஒரு குவிண்டால் அதிகபட்சம் ரூ.5,289, குறைந்தபட்சம் ரூ.5,099க்கு விலை போனது. இந்த பருவத்திற்கான கடைசி நாளான நேற்று 25 லட்சத்திற்கு பஞ்சு மூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டது. கடந்த 2013ம் ஆண்டு டிச.11ம் தேதி துவங்கிய இந்த பருத்தி சந்தையில் இது வரை 60 ஆயிரம் மூட்டை பஞ்சுகள், 30 கோடிக்கு விற்றுள்ளது. தமிழகத்திலேயே அதிகபட்ச விலையாக மூட்டைக்கு 5,799 ரூபாய் உயர்ந்த விலை நிர்ணயம் செய்து சாதனை படைத்துள்ளது. இந்த சந்தை இனி வரும் நவம்பர் மாதம் மீண்டும் துவங்கும் என கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க மேலாண்மை இயக்குனர் பாண்டியன் தெரிவித்தார்.

## கள்ளக்குறிச்சியில் மாம்பழ விற்பனை

**கள்ளக்குறிச்சி**: மாம்பழ சீசன் உச்சமடைந்துள்ள நிலையில் கள்ளக்குறிச்சி பகுதியில் மாம்பழங்கள் வருகை அதிகரித்துள்ளது. கோடை காலத்தில் முக்கனிகளில் முதற்கனிஒன்றான மாம்பழ விளைச்சல் அதிகம் இருக்கும். இந்த ஆண்டு மாம்பழ வரத்து அதிகமாக உள்ளது. திருச்சி பகுதியிலிருந்து பங்கனபள்ளி, சேலம் பகுதியிலிருந்து மல்கோவா மற்றும் லோக்கல் வகையான நீலம் மற்றும் ஒட்டு ரக மாம்பழங்கள் கள்ளக்குறிச்சி மார்க்கெட்டில் அதிகம் விற்பனை செய்யப்படுகிறது. கிலோ 40 முதல் 50 ரூபாய் வரையில் இம்மாம்பழங்கள் விற்பனை செய்யப்படுகிறது. மாம்பழ சீசன் ஏற்றம் பெற்ற நிலையில் கள்ளக்குறிச்சி மார்க்கெட்டில் மாங்காய் வரத்து குறைந்துள்ளது. கிலோ 20 ரூபாய்க்கு கிடைக்கும் மாங்காய் விலை இனி அதிகம் இருக்கும் என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

## நன்செய் நிலத்தில் மானாவாரி சாகுபடி

**மரக்காணம்**: மூன்று போகம் நெற்பயிர் சாகுபடியான நன்செய் நிலங்களில் கோணாங்குப்பம் விவசாயிகள் மானாவாரி பயிர் செய்ய முடிவு செய்துள்ளனர்.

மரக்காணம் ஒன்றியம் கூனிமேடு செங்கட் ஏரி பாசனம் போக, புளியாங்கால் பாசனத்தில் 9 கிராமங்களில் உள்ள ஆயிரம் ஏக்கர் விளை நிலங்கள் பயன்

பெற்றன. இதனால் கீழ்பேட்டை, பனிச்ச மேடு, ஆலப்பாக்கம், ஆட்சிக்காடு. அனுமந்தை, செய்யாங்குப்பம், செட்டிக்குப்பம், மண்டவாய், கோணாங்குப்பம், மரக்காணம் கிராமங்களில் இரண்டு போகம் சாகுபடி நடந்தது.
கடந்த 10 ஆண்டுகளில் செங்கட் ஏரிக்கு தண்ணீர் வரத்து முடங்கியது . ஏரியின் நீர்பிடிப்பு பகுதியில் பெய்த மழையால் ஒவ்வொரு ஆண்டும் 40 சதவீதம் தண்ணீர் அளவு மட்டுமே ஏரியில் தேங்குகிறது. இந்த தண்ணீரை கொண்டு முதல் மடை மற்றும் பள்ள நிலங்களில் சாகுபடி செய்கின்றனர். கோணாங்குப்பம் விவசாயிகள் கடைமடை பகுதி என்பதால், கடற்கரை பகுதிகளில் இருந்து போர்வெல் மூலம் தண்ணீர் பெற்று மூன்று போகம் நெற் பயிர் செய்தனர். இந்த ஆண்டு கடும் வறட்சியால் தண்ணீரின்றி பயிர் செய்வதை தவிர்த்து வந்தனர். நிலத்தை தரிசாக போடாமல் இருக்க மானாவாரி பயிர்களை செய்து வருகின்றனர்.

## கேழ்வரகு சாகுபடி குறைவு

**கண்டமங்கலம்**: கண்டமங்கலம் பகுதி விவசாயிகள் கேழ்வரகு சாகுபடி செய்வது அரிதாகி வருகிறது. விழுப்புரம் மாவட்டம் கண்டமங்கலம் வட்டாரத்தில் விவசாயிகள் நெல், கரும்பு, மணிலா, மரவள்ளி உள்ளிட்ட பயிர்களை அதிக அளவு பயிர் செய்து வருகின்றனர். ஆனால் கேழ்வரகு சாகுபடி கடந்த காலங்களைக் காட்டிலும் பல மடங்கு குறைந்து வருகிறது. கண்டமங்கலம் அடுத்த மிட்டாமண்டகப்பட்டு, பாக்கம், பள்ளித்தென்னல், திருமங்கலம், வழுதாவூர், முட்ராம்பட்டு உள்பட குறிப்பிட்ட கிராமங்களில் மிகவும் குறைந்த அளவில் சுமார் 20 ஏக்கர் பரப்பளவில் மட்டுமே கேழ்வரகு சாகுபடி செய்யப்பட்டுள்ளது.
கோடை வெயிலுக்கு கண்டமங்கலம், பள்ளித்தென்னல் உள்பட பல்வேறு இடங்களில் கூழ் விற்பனை அதிகரித்து வரும் வேளையில் விவசாயிகள் கேழ்வரகு சாகுபடி செய்வது அரிதாகி வருகிறது.

## வானிலையில் மாற்றம்: விவசாயிகள் பாதிப்பு

**திருக்கோவிலூர்**: திருக்கோவிலூர் பகுதியில் சுட்டெரிக்கும் வெயிலில் கரும்பு பயிர் கருகுவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

வானிலையில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்தால் விவசாயம் பெருமளவில் பாதித்துள்ளது.

திருக்கோ விலூர் சுற்று வட்டார பகுதிகளில் வடகிழக்கு பருவ மழை பொய்த்ததால் நிலத்தடி நீரைக் கொண்டு கரும்பு, எள் பயிர்களை விவசாயிகள் பயிரிட்டனர். சித்திரை மாதம் கோடை மழை இந்த ஆண்டு பெய்ய வில்லை. இதனால் மானாவாரியில் விதைப்பு செய்த பயிர்கள் கருகியது. வைகாசி மாதம் அளவுக்கு அதிகமாக காற்று வீசியது. கரும்பு பயிர்கள் சேதமடைந்தது. இந்நிலையில் இரண்டு முறை திடீர் என மழை வெளுத்து வாங்கியது. இதனால் காய்ந்து கருகி, முறிந்து விழுந்திருந்த கரும்பு பயிர்கள் துளிர்விடத் துவங்கியது. ஆனிமாதம் பிறந்ததில் இருந்தே சித்திரையை மிஞ்சும் அளவில் வெயில் சுட்டெறிக்கிறது. இதனால் வெப்பம் தாளாமல் மக்கள் தவிப்பது ஒருபக்கம் என்றால் துளிர்விட்ட கரும்பு பயிர் முற்றிலுமாக காய்ந்து வருகிறது. வானிலையில் ஏற்பட்டிருக்கும் முன்னுக்குபின் முரணான மாற்றத்தால் விவசாயிகள் பயிர் செய்வதில் சிக்கல் எழுந்துள்ளது. தென்மேற்கு பருவ மழை காலத்தில் விழுப்புரம் உள்ளிட்ட பகுதிகள் மழை பெற வாய்ப்பில்லை. வெப்ப சலனம் காரணமாக கம்பு, மக்காச்சோளம் பயிர்களுக்கு தேவையான மழை கிடைக்கும். அதற்கும் தற்போது வாய்ப்பு குறைவாகவே இருப்பதால் விவசாயிர் கவலையில் உள்ளனர்.

## அதிகரிப்பு ! : டிராக்டர் மூலம் வேர்க்கடலை விதைப்பு ... :மாடுகள் குறைந்ததால் திடீர் நடவடிக்கை

**அவலூர்பேட்டை**: கிராமங்களில் <உழவு மாடுகளின் எண்ணிக்கை குறைந்து போனதால் உழவு மற்றும் விதைப்பு பணிகளுக்கு டிராக்டர் பயன்பாடு அதிகரித்துள்ளது.

மேல்மலையனூர், அவலூர்பேட்டை உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த கிராமங்களில் தண்ணீர் பற்றாக் குறை நிலவியது. இதனால் விவசாயிகள் ஆடு, மாடுகளுக்கு தீவனம் வழங்கவும், மேய்ச்சலுக்கும் அவதிப்பட்டனர். பலரும் பசு மாடுகளை மட்டும் வைத்து கொண்டு காளைகளை விற்று விட்டனர். சில தினங்களுக்கு முன்

மழை பெய்ததால் பல கிராமங்களிலும் வேர்க்கடலை விதைப்பிற்காக கொட்டை பிரிக்கும் பணியில் பெண்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

விதைப்பு

கடந்த வாரத்தில் தேப்பிரம்பட்டு, மேல்வைலாமூர் உள்ளிட்ட கிராமங்களில் வேர்க்கடலை விதைப்பு பணிகள் முடிவடைந்தது. மீதமுள்ள கிராமங்களிலும் விதைப்பு பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. விதைப்பிற்கு வழக்கமாக இரண்டு காளை மாடுகளை பூட்டி ஒருவர் ஏர் ஓட்டவும் அவருக்கு பின்னே ஒருவர் வேர்க்கடலை விதைகளை போட்டுக்கொண்டும் வரவேண்டும்.ஒரு ஏக்கர் நிலத்திற்கு குறைந்தது இரண்டு ஏர் பூட்டி விதைப்பு மேற்கொண்டால் ஒரு நாளுக்குள் இப்பணி முடியும்.

பற்றாக்குறை

விவசாய பணிகள் மேற்கொள்ள ஆள் பற்றாக்குறை ஒரு புறமும், மாடுகள் இல்லாத நிலையும் உள்ளது. இதனால் டிராக்டர் மூலம் விதைப்பு பணிகளை விவசாயிகள் செய்கின்றனர். இந்த முறையில் ஒரு மணி நேரத்திற்குள் ஒரு ஏக்கர் நிலம் விதைக்க முடிகிறது. இதனால் வேலை பளுவும் குறைவதால் விவசாயிகள் டிராக்டரில் விதைப்பு செய்து வருகின்றனர்.

செலவு குறைவு

ஒரு ஏக்கருக்கு செலவு 900 ரூபாய் மட்டுமே ஆகிறது. காளை மாட்டில் ஏர் பூட்டி உழவு நடத்தினால் 1200 ரூபாய் பணமும், சாப்பாட்டு செலவும் ஆகிறது.

நேரம் காலம் மட்டுமின்றி விதைப்பிற்காக ஆகும் செலவும் குறைவாக இருப்பதால் தற்போது டிராக்டர் மூலம் விதைப்பு பணிகளை மேற்கொள்ள பல விவசாயிகள் விரும்புகின்றனர்.தற்போது விதைத்துள்ள வேர்க்கடலை ஆவணி மாத கடைசியிலும், புரட்டாசி முதல் வாரத்திலும் அறுவடைக்கு தயாராகிவிடும்.

## 'மானிய விலை சோலார் மோட்டார் பயனுள்ளதாக உள்ளது'

**பொன்னேரி** : அரசு மானிய விலையில் பெறப்பட்ட சோலார் மற்றும் ஆழ்துளை மோட்டார் பயனுள்ளதாக இருக்கிறது' என, விவசாயி மகிழ்ச்சியுடன் கூறி உள்ளார்.

பொன்னேரி, வேளாண் மை பொறியியல் துறை சார்பில், மானிய விலை யில், பஞ்செட்டி, சின்னகாவணம், தேவராஞ்சேரி, லட்சுமிபுரம் ஆகிய பகுதிகளை சேர்ந்த, 19 விவசாயிகளுக்கு மானிய விலையில் சோலார் மின்மோட்டார்கள் வழங்கப்பட்டு உள்ளன.ஒவ்வொன்றும், ஐந்து குதிரை திறன் கொண்ட ஆழ்துளை மோட்டார்கள் இயங்கும் வகையில், 17 பேனல்களுடன் சோலார்கள் அமைக்கப்பட்டு உள்ளன. அவற்றின் மூலம் கிடைக்கும், 300 முதல், 340 வோல்ட் மின்சாரத்தை கொண்டு, மூன்று ஏக்கர் விவசாய நிலத்திற்கு நீர் பாய்ச்ச முடிகிறது. இதுகுறித்து, பொன்னேரி அடுத்த, சின்னகாவணம் பகுதியைச் சேர்ந்த விவசாயி தாரகராமன் கூறியதாவது:நான்கு லட்சம் ரூபாய் மதிப்புள்ள சோலார் சிஸ்டத்தை, மானிய விலையில், 93 ஆயிரம் ரூபாய்க்கு அரசு வழங்கியது. அதில் சோலார் சிஸ்டம், ஐந்து குதிரை திறன் கொண்ட ஆழ்துளை மோட்டார், 160 அடி பிளாஸ்டிக் உருளை ஆகியவை இருக்கும்.தினமும், காலை, 7:00 மணி முதல், மாலை, 5:00 மணி வரை, மோட்டார் இயங்குகிறது. தானியங்கி சுவிட்ச் உள்ளதால், சூரிய வெளிச்சம் குறையும் நேரங்களில் தானதாக அணைந்து விடும். மீண்டும் வெளிச்சம் கிடைத்தவுடன், இயங்க துவங்கும்.மேலும், மின்சாரத்தை நம்பி இருக்காமல், சோலார் மூலம் ஆழ்துளை மோட்டார் இயங்குவதால், விளை நிலங்களுக்கு சிரமமின்றி தண்ணீர் பாய்ச்ச முடிகிறது. விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இந்த சோலார் சிஸ்டம் அமைந்து உள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

## "ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ' அறிவிப்பு; சிறு தேயிலை விவசாயிகளுக்கு "கசப்பு'

**மஞ்சூர்** : நீலகிரி மாவட்ட கூட்டுறவு தொழிற்சாலைகளில் "கோட்டா' முறை அமல்படுத்தப்பட்ட நிலையில், "ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ' என்ற புதிய அறிவிப்பால் விவŒாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் 15 கூட்டுறவு தொழிற்சாலைகளுக்கு, 25 ஆயிரம் அங்கத்தினர், பசுந்தேயிலையை வினியோகித்து வருகின்றனர். மாவட்டத்தில் பரவலாக பெய்து வரும் மழையால், தேயிலை வரத்து படிப்படியாக அதிகரித்து வருகிறது. இதனால், தொழிற்சாலைகளுக்கு வரும் பசுந்தேயிலையின்

அளவும் அதிகரித்த காரணத்தால், மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான தொழிற்சாலைகளில், "கோட்டா' முறை அமல்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ கோட்டா முறையால், தேயிலை பறிக்கும் விவசாயிகளின் பெரும்பாலான இலை வீணாகி நஷ்டம் ஏற்படுகிறது. இதனால், கூடலூர் உட்பட பல்வேறு பகுதிகளிலும் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில், விவசாயிகளுக்கு மற்றொரு அதிர்ச்சி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, கூட்டுறவு தொழிற்சாலை அங்கத்தினருக்கு வினியோகிக்கப்பட்ட கோட்டா கார்டில், "ஒரு ஏக்கர் வைத்துள்ள விவசாயிகள், ஒரு கிலோ இலையை எடைபோட அனுமதிக்கப்படும்' என, குறிப்பிட்டுள்ளது. இந்த அறிவிப்பு விவசாயிகளை அதிர்ச்சி அடைய செய்துள்ளது. இது குறித்து மஞ்சூர் கூட்டுறவு தொழிற்சாலை நிர்வாக தரப்பில் கேட்டபோது, "தொழிற்சாலை அங்கத்தினராக தகுதி பெற குறைந்தது ஒரு ஏக்கர் தேயிலை தோட்டம் இருக்க வேண்டும். அதன் அடிப்படையில் தான், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதே சமயத்தில் அங்கத்தினர்கள் வினியோகிக்கும் பசுந்தேயிலையை கணக்கிட்டுதான் கோட்டா முறை அமல்படுத்தப்படுகிறது' என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூடுதல் டிரப்கள் தேவை : கூட்டுறவு தொழிற்சாலைக்கு பசுந்தேயிலை வினியோகிக்கும் அங்கத்தினர்களின் ஒருவராக சிறு விவசாயி சரஸ்வதி என்பவர் கூறுகையில்,""பரவலாக மழை பெய்தால் பசுந்தேயிலை வரத்து அதிகரிக்க கூடும் என்பது தொழிற்சாலை நிர்வாகத்துக்கும் தெரியும். இதற்கு ஏற்றாற்போல், இயந்திரத்தின் உற்பத்தி திறனை அதிகப்படுத்துவதுடன், கூடுதல் "டிரப்களை' அமைத்தால் இது போன்ற சிரமத்தை தவிர்க்க முடியும். இதனை உணராமல், "கோட்டா' முறையை அமல்படுத்தியதால், தேயிலை தோட்டங்களிலேயே பல லட்சம் கிலோ இலை வீணாகும் நிலை ஏற்பட்டுள்ளது. இதில், "ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ' என்ற அறிவிப்பு, எங்களை மேலும் அதிர்ச்சியில் ஆழ்த்தி உள்ளது. இது குறித்து கூட்டுறவு துறை அமைச்சருக்கும் அங்கத்தினர்கள் சார்பில் மனு அனுப்பி உள்ளோம்," என்றார்.

## விதை கிராமங்களுக்கு மானியம்; சாகுபடியை அதிகரிக்க முயற்சி

**திண்டுக்கல்**: வேளாண்மை துறையினரால் தேர்வு செய்யப்பட்டுள்ள விதை கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு, தேவையான அனைத்தையும் 50 சதவீத மானியத்தில் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் நடப்பு ஆண்டிற்கான உணவு உற்பத்தி இலக்கு 145 மெட்ரிக் டன் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதை பூர்த்தி செய்வதற்கு தேவையான முயற்சிகளை அந்தந்த மாவட்ட வேளாண்மை துறையினர் மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. தென் மேற்கு பருவமழை துவங்க இருப்பதால், சாகுபடியை கருத்தில்கொண்டு விவசாயிகளுக்கு தேவையான விதை நெல், இருப்பு வைக்கும் முயற்சி துவக்கப்பட்டுள்ளது.வேளாண்மை துறையினர் கூறியதாவது: தரமான விதை ரகங்களை விவசாயிகளுக்கு வினியோகிக்க வேண்டுமென்பதற்காக, விதை கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. விதை நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு தேவையான அனைத்தும் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படும். ரஇதன் மூலம் குறுகிய காலத்தில் அறுவடை செய்வதற்கு வசதியான நெல் ரகங்கள், விதை கிராம விவசாயிகளுக்கு வழங்கப்படும், என்றனர்.

## விவசாயிகள் ஏக்கம்

**தேவாரம்** : தேவாரம் பகுதியில், ஜூன் முதல் வாரம் துவங்கி, ஆகஸ்ட் இறுதி வரை தொடர் சாரல் பெய்யும். இந்த சாரல் மழையை நம்பி, கோம்பை, பண்ணைப்புரம், தேவாரம், டி.மீனாட்சிபுரம், தம்மிநாயக்கன்பட்டி, சங்கராபுரம் பகுதியில் ஐந்தாயிரம் ஏக்கருக்கு மேல், மானாவாரி பயிரிடுவார்கள். இந்த ஆண்டு, ஜூன் இரண்டாவது வாரத்தில் சாரல் தலை காட்டியது. இரண்டு நாட்கள் மட்டும் தூறிய சாரல், அடுத்த நாட்களில் பெய்யவில்லை. கடந்த பத்து நாட்களாக, பலத்த காற்று மட்டும் வீசுகிறது. மழையில்லாமல் காற்று வீசுவதால், நிலத்தில் உள்ள ஈரப்பதம்

காய்ந்து விடுகிறது. அடுத்து வரும் நாட்களில், சாரல் பெய்தால் தான், ஆடி பட்ட விதைப்பு பணிகளில் விவசாயிகள் ஆர்வம் காட்டுவார்கள்.

**விவசாயிகள் சந்திப்பு**

**தேவதானப்பட்டி** : குள்ளப்புரம் வேளாண்மை தொழில்நுட்பக் கல்லூரியில் பயிலும் நான்காமாண்டு மாணவர்கள் சபிபுல்லா, ராஜேஸ்வரன், சிவப்பிரகாஷ், பிபின்பவுலோஸ், கவின் ஆண்டோவிமல், செல்வகணபதி, பகத்சிங், அன்பழகன் ஆகியோர் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில், வேளாண்மை தொழில்நுட்பம் பற்றி பயிற்சி பெறுகின்றனர்.

இதையடுத்து, சுற்று வட்டார கிராமங்களில் பல்வேறு விவசாய நலத்திட்டங்களால் பயனடைந்த முன்னோடி விவசாயிகளை சந்தித்து, நவீன வேளாண் தொழில்நுட்பங்களை கேட்டறிந்தனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

**கோதுமை உற்பத்தியில் புரட்சி ஏற்படுத்திய இந்திய வேளாண் விஞ்ஞானி சஞ்சய் ராஜாராமுக்கு சர்வதேச விருது**




சென்னை,

கோதுமை உற்பத்தியில் புரட்சி ஏற்படுத்திய இந்திய வேளாண் விஞ்ஞானி சஞ்சய் ராஜாராமுக்கு, சர்வதேச விருது உலக உணவு தினமான அக்டோபர் 16-ந் தேதி வழங்கப்படுகிறது.

<u>உலக உணவு விருது</u>

உலகில் வாழும் மக்கள் அனைவருக்கும் ஊட்டச்சத்துடன் நிலையான உணவு வழங்கப்படுவதன் முக்கியத்துவத்தை உணர்ந்து செயல்படும் நபர்களை கண்டறிந்து, அவர்களுக்கு உலக உணவு தினமான அக்டோபர் 16-ந் தேதி, 'சர்வதேச விருது' வழங்கி அமெரிக்காவில் இயங்கி வரும் உலக உணவு பரிசு நிறுவனம் கவுரவித்து வருகிறது. அதன்படி, இந்த ஆண்டு கோதுமை உற்பத்தியில் புரட்சியை ஏற்படுத்திய இந்தியாவை சேர்ந்த வேளாண் விஞ்ஞானி சஞ்சய் ராஜாராம் விருதுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

<u>எம்.எஸ்.சுவாமிநாதன் தகவல்</u>

இதுதொடர்பாக உலக உணவு விருதை தேர்ந்தெடுக்கும் குழுவின் தலைவரும், உலகின் சர்வதேச உணவு விருதினை 1987-ம் ஆண்டு முதல் முறையாக பெற்றவரும், சென்னை தரமணியில் அமைந்துள்ள எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவருமான எம்.எஸ்.சுவாமிநாதன் சென்னையில் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:-

இந்தியாவை சேர்ந்த வேளாண் விஞ்ஞானி சஞ்சய் ராஜாராமுக்கு சர்வதேச உணவு விருது கிடைத்திருப்பதை எண்ணி இந்தியர்கள் அனைவரும் பெருமிதம் கொள்ள வேண்டும். சஞ்சய் ராஜாராம், கோதுமைப்பயிரில் சுமார் 480 புதிய வகைகளை உருவாக்கியதில் பெரும்பங்காற்றியவர். அவரால் உருவாக்கப்பட்ட பயிர் ரகங்கள் உலகின் 51 நாடுகளில், 58 மில்லியன் 'ஹெக்டேர்' பரப்பில் வளர்க்கப்பட்டு வருகிறது.

<u>கோதுமை-மக்காச்சோளம்</u>

இந்திய அளவில் மட்டுமின்றி உலக அளவில் வேளாண் துறையில் புகழ் பெற்ற சஞ்சய் ராஜாராம், 'கோதுமை மற்றும் மக்காச்சோளத்தின் சர்வதேச மேம்பாட்டு மையத்தின்' முன்னோடியாக திகழ்கிறார். வேளாண்மை துறையில் தலைமைத்துவத்திற்கான 'டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் விருது', சஞ்சய் ராஜாராமுக்கு 2010-ம் ஆண்டு வேளாண்மை அறிவியல் முன்னேற்ற நிறுவனத்தால் வழங்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையின் சார்பில் அக்டோபர் 16-ந் தேதி கொண்டாடப்படும், உலக உணவு தின விழாவில் சஞ்சய் ராஜாராமுக்கு உலக உணவு விருது வழங்கப்பட உள்ளது. இவ்வாறு எம்.எஸ்.சுவாமிநாதன் கூறினார்.

<u>மெக்சிகோ நாட்டு குடியுரிமை</u>

சர்வதேச உணவு விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சஞ்சய் ராஜாராம் 1943-ம் ஆண்டு உத்தரபிரேத மாநிலம் வாரணாசியில் பிறந்தார். ஆஸ்திரேலியாவில் உள்ள சிட்னி பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர். வேளாண்மை துறையில் 400 ஆராய்ச்சி கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். இந்தியாவில் பிறந்த சஞ்சய் ராஜாராம் தற்போது மெக்சிகோ நாட்டில் குடியுரிமை பெற்று வசித்து வருகிறார். சஞ்சய் ராஜாராமுக்கு விருதுடன் 2½ லட்சம் அமெரிக்க டாலர் (இந்திய ரூபாய் மதிப்பின்படி ரூ.1½ கோடி) வழங்கப்பட உள்ளது. சஞ்சய் ராஜாராமுக்கு ‘உலக உணவு விருது’ வழங்கப்படுவது குறித்த அதிகாரபூர்வ தகவலை அமெரிக்காவின் மாநில துறை செயலாளர் ஜான் கேரி, ‘உலக உணவு பரிசு’ நிறுவனத்தின் தலைவர் கேன்த் எம்.கியூன் ஆகியோர் நேற்றிரவு 9.30 மணிக்கு (அமெரிக்க நேரப்படி பகல் 11 மணி) அறிவித்தனர்.

## <u>காஞ்சீபுரம் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் தள்ளிவைப்பு</u>

**காஞ்சீபுரம்**

காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் கா.பாஸ்கரன் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியிருப்பதாவது:–

காஞ்சீபுரம் மாவட்டத்தை சேர்ந்த வேளாண்மை பெருமக்களுக்கு காஞ்சீபுரம் மாவட்டத்தின் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வருகிற 20–ந் தேதி (வெள்ளிக்கிழமை) நடைபெற இருந்தது. இந்த கூட்டம் நிர்வாக காரணத்தினால் 27–ந் தேதி (வெள்ளிக்கிழமை) காலை 11 மணிக்கு, காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் வளாகத்தில் உள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கில் மாவட்ட கலெக்டர் தலைமையில் நடைபெற உள்ளது.

மேற்படி கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு மனுக்கள் அளிக்கலாம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உற்பத்தியை அதிகரிக்க நவீன முறையில் நெல், கரும்பு சாகுடி திட்டம்**

**சிவகங்கை,** உற்பத்தியை அதிகரிக்க நவீன முறையில் நெல் மற்றும் கரும்பு சாகுபடி திட்டத்தை உருவாக்க வேண்டும் என்று வேளாண்மை இணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

பசுமை புரட்சி

சிவகங்கை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் செல்லத்துரை விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:–

வேளாண்மை வளர்ச்சியுடன் இணைந்த பொருளாதார வளர்ச்சியே நாட்டின் உண்மையான வளர்ச்சி. இதனால் தமிழக அரசு வேளாண்மை துறைக்கு 2ம் பசுமை புரட்சியினை ஏற்படுத்த பல்வேறு நவீன உத்திகளை நடைமுறைப்படுத்தி வருகிறது. தமிழகத்தை உணவு உற்பத்தி மிகுதியான மாநிலமாக மாற்ற வேண்டும். இதற்காக மண் வள மேம்பாடு, தரிசு நிலங்களை பசுமை நிலங்களாக்குதல், நீர்வள ஆதாரத்திற்கு பண்ணை குட்டை அமைத்தல், சொட்டு நீர் பாசனமுறை ஆகியவை நடைமுறைப்படுத்தப்படுகிறது.

அத்துடன் நவீன தகவல் தொடர்பு தொழில் நுட்ப வசதிகள் மூலம் விவசாயிகளுக்கு சாகுபடி, வானிலை மற்றும் சந்தை தொடர்பான ஆலோசனைகளை வழங்குவது, விவசாய உற்பத்தியை இரு மடங்காக ஆக்குவது, விவசாய குழுக்களை அமைத்து விளை பொருட்களின் மதிப்பை கூட்டி சந்தைப்படுத்த தேவையான வசதிகளை அமைத்தல், உற்பத்தி பொருட்களை பாதுகாக்க போதுமான உள்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுத்தல் ஆகிய திட்டங்களும் செயல்படுத்த உள்ளது.

செயல்முறை விளக்கம்

மேலும் விவசாயத்தில் தற்போது உள்ள தொழில் நுட்ப முறைகளை மாற்றி உற்பத்தியை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. இதற்காக திருந்திய நெல் சாகுபடி செய்து குறைந்த அளவு விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல்

பெறுவது, கரும்பு உற்பத்தி செய்யும் போது கருணை முத்துக்களை முளைக்க வைத்து நடவு செய்வது, துவரை விதைகளை பைகளில் முளைக்க வைத்து நடவு செய்தல் ஆகிய நவீன முறைகள் பயன்படுத்தப்பட உள்ளது.

இது குறித்து விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கம் செய்வதற்காக அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் இந்த திட்டத்தின் கீழ் இருப்பிடம், மழை அளவு, விவசாய திட்ட அட்டவணை, கிராமங்களில் பெறப்படும் மகசூல் விவரம், மண்ணின் வகை, சாகுபடி பரப்பு, பயிர் பாதுகாப்பு முறை, உரம் இடும் அளவு, நுண்ணீர் பாசன முறை, விவசாயிகளுக்கான கடன் திட்டம் ஆகியவை குறித்து விளக்கப்பட உள்ளது.

எனவே சிவகங்கை மாவட்ட விவசாயிகள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி நவீன முறையில் சாகுபடி செய்து பயன் அடைய வேண்டும்.இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் கூறி உள்ளார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மலைப்பகுதியில் கனமழை**

**கோவை**, : கோவை மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள வாளையார், கந்தே கவுண்டன் சாவடி, மதுக்கரை, தொண்டாமுத்தூர், ஆலாந்துறை, நரசீபுரம், வடவள்ளி, மருதமலை, மாங்கரை, பாலமலை, குருடம்பாளையம், பெரியநாயக்கன்பாளையம், காரமடை, மேட்டுப்பாளையம் பகுதியில் நேற்று கனமழை பெய்தது. சில பகுதியில் நேற்று முன் தினம் இரவில் இருந்து மழை பெய்தது.

வனப்பகுதியில் சூறாவளி காற்றுடன் மழை பெய்தது. சிறுவாணி, மாங்கரை வனத்தில் காற்றின் காரணமாக சில மரங்கள் வேறுடன் சாய்ந்து விழுந்தன. மழையின் காரணமாக நொய்யல், பவானி ஆற்றில் நீர் வரத்து கணிசமாக அதிகரித்துள்ளது. மாவட்டத்தின் உள் பகுதிகளில் பரவலாக மழை பெய்யவில்லை. வெயிலுடன் அனல் காற்று வீசியது. மழை எதிர்பார்ப்பில் இருந்த விவசாயிகள், பொதுமக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

## திருச்சி மாவட்டத்தில் குறுவை சாகுபடி சிறப்பு திட்டம் விரைவில் செயல்படுத்த முடிவு

**திருச்சி**, : திருச்சி மாவட்டத்தில் குறுவை சாகுபடிக்கான சிறப்பு திட் டம் செயல்படுத்தப்பட உள்ளது.

தமிழகத்தில் டெல்டா பகுதிகளில் நிலத்தடிநீர் ஆதாரமுள்ள குழாய் கிணறு மற்றும் வடிமுனை குழாய் ஆகியவற்றின் மூலம் சுமார் 1லட்சம் ஏக் கர் பரப்பில் குறுவை சாகு படியை ஊக்குவிக்கும் நோக்கில் ரூ.32.95 கோடி யில் குறுவை சாகுபடிக் கான சிறப்பு திட்டம் அறிவிக்கப் பட்டது. இத்திட்டத்தின் கீழ், திருச்சி மாவட்டத்திற்காக ரூ.1.47 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசாணை வெளியிடப் பட்டுள்ளது. இத்திட்டம் திருச்சி மாவட்டத்தில் நீர் ஆதாரமுள்ள குழாய் கிணறு மற்றும் வடிமுனை குழாய் பாசனமுள்ள வட்டாரங்களான அந்தநல் லு£ர், முசிறி, மண்ணச்ச நல்லு£ர் மற்றும் லால்குடி பகுதியில் 8,000 ஏக்கரில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

இது குறித்து திருச்சி வேளாண் இணை இயக்குனர் குருராஜ்சிங் கூறுகை யில், இத்திட்டத்தின்கீழ் திருந்திய நெல்சாகுபடி முறையில் சமுதாய நாற்றாங்கால் அமைக்க ஒரு ஏக் கர் நா ற்றாங்கால் அமைப்பதற்கான செலவினம் மற் றும் இடுபொருட்களுக் கான ரூ.25ஆயிரம் மான் யம் வழங்கப்பட உள் ளது. இச்சமுதாய நாற்றாங்கால் 70ஏக்கர் பரப்பில் அமைக்க இலக்கீடு பெறப்பட்டுள்ளது. இதன் மூலம் 7,000 ஏக்கரில் திருந்திய நெல் சாகுபடி செய்வதற்கான தரமான நெல் நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு முழு மான்யத்தில் வழங்கப்பட உள்ளது.

குறுவை நெற்பயிரின் உற்பத்தி திறனை அதிகரிக்க, 100 சதவீத மான்யத்தில் ஏக்கருக்கு 5 கிலோ நெல் நுண்சத்து உரம் மற் றும் 10 கிலோ சிங்சல்பேட் உரம், 5,000 ஏக்கருக்குரிய பயனாளிகளுக்கு ஜிப்சம் ஒரு ஏக்கருக்கு 200 கிலோ வீதம் 2,500 ஏக்கருக்கு உயிர் உரங்கள் மற்றும் திரவ வடிவிலான உயிர் உரங்கள் தலா 4,000 ஏக்கருக்கும் வேளாண்மை துறையின் மூலம் வழங்கப்பட உள்ளது என்றார்.
100சதவீத மான்யத்தில் இயந்திரங்கள்

மேலும் குருராஜ்சிங் கூறுகையில், திருச்சி மாவட்டத்தில் உள்ள 20 விவசாய குழுக்களுக்கு 100 சதவீத மான்யத்தில் நெல் நடவு இயந்திரமும், நெற்பயிரில் களையெடுக்கும் இயந்திரமும் மற்றும் பாசன நீர் விரையமாவதை தவிர்க்க ஒரு பயனாளிகளுக்கு அதிகபட்சமாக 180மீட்டர் நீளமுள்ள 150யூனிட் 90எம்எம் ஹெச்டிபிஇ பைப்பும் வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் வழங்கப்பட உள்ளது.
இதன் மூலம் டெல்டா வட்டாரங் களில் குழாய் கிணறு மூலம் குறுவை சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவித்து குறுவை சாகுபடி பரப்பை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

**<u>தோட்டக்கலை சார்பில் விவசாயிகளுக்கு பயிற்சி</u>**

**தொட்டியம்**, : நத்தம் பகுதி விவசாயிகளுக்கு தோட்டக்கலை சார்பில் பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

தொட்டியம் தாலுகா நத்தம் ஊராட்சியில் பல்வேறு பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு தேசிய தோட்டக்கலை திட்டத்தின் கீழ் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. ஊராட்சித் தலைவர் விஸ்வநாதன் தலைமை வகித்து பயிற்சியை துவக்கி வைத்தார். மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் சந்திரசேகர் பல்வேறு திட்டங்கள், மானியங்கள் குறித்து பேசினார். தோட்டக்கலை உதவி இயக்குநர் ராஜேந்திரன் வரவேற்றார். திருச்சி மகளிர் தோட்டக்கலை கல்லூரி பேராசிரியர் ஜீவஜோதி, மா, கொய்யா, வாழை பயிர்களுக்கு தேவையான தொழில்நுட்ப கருத்துக்களையும், ஜெகதீசன் வெங்காய பயிர்களின் தொழில்நுட்ப கருத்துக்களையும் விளக்கினர். மாலைநத்தம் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள மா

அமர்வு தோட்டத்தினை விவசாயிகள் பார்வையிட்டு அதிகாரிகளுடன் கலந்துரையாடினர். பயிற்சி ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் முத்துக்குமரன், யோகேந்திரன் செய்திருந்தனர். தோட்டக்கலை உதவி இயக்குநர் ராஜேந்திரன் நன்றி கூறினார்.

## நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்

**திண்டுக்கல்**, : திண்டுக்கல் கலெக்டர் அலுவலகத்தில் நாளை(வெள்ளி) காலை 10 மணிக்கு விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற உள்ளது. இதில் கடந்த கூட்டத் தில் அளிக்கப்பட்ட மனுக் கள் மீது விவாதம் நடைபெ றும். கலெக்டர் உள்ளிட்ட விவசாய அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண உள்ளனர். எனவே கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளவும். மனு அளிக்க வரும் விவசாயிகள் இரண்டு நகல்களாக அளிக்க வேண்டும் என்று மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.